**கெபிதிகொல்லாவ பிரதேச சபை**
**அனுராதபுரம் மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2019 மார்ச் 29 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுலை 12 ஆம் திகதியும், தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கெபிதிகொல்லாவ பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டண வருமானம் இணங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய வருமானம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (ii) | மீளாய்வாண்டிற்கான ரூபா 117,597 தொகையான ஏனைய வருமான பெறுவனவு வருமான மானியத்தின் கீழ் காட்டபப்பட்டிருந்தது. | வருமானம் சரியாக வகைப்படுத்தப்பட்டு காட்டப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (iii) | வருடக்கணக்காக இருந்து வரும் கேள்வி வைப்புக்கள் கணக்கின் பெறுமதி ரூபா 3,707,731 தொகையான பெறுமதி | சொத்துக்கள் சரியாக கணக்கில் காட்டப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் கேள்வி வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (iv) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,604,320 ஆன 08 சொத்து உருப்படிகளின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் சரியாக கணக்கில் காட்டப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (v) | திவிநெகும திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டின் போது சபைக்கு கிடைத்திருந்த ரூபா 208,143 பெறுமதியான 188 கல்வனைஸ் குழாய்கள் நிலையான சொத்துக்களின் கீழ் இரண்டு தடவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. . | சொத்துக்கள் சரியாக கணக்கில் காட்டப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (vi) | பிளிசரு செயற்திட்டத்திலிருந்து சபைக்கு வழங்கப்பட்டிருந்த ஹலர் இயந்திரத்தின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய சொத்துக்கள் சரியாக கணக்கில் காட்டப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் 2019 ஆம் அண்டில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் |

**(ஆ) இணங்காத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மூலதனச் செலவுக் கணக்கின் மீதி ரூபா 15,332,885 மற்றும் ரூபா பொது பேரேட்டின் பிரகாரம் ரூபா 15,262,885 என காண்பிக்கப்பட்டமையால் ரூபா 70,000 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | சம்பந்தப்பட்ட மீதிகளிலுள்ள வித்தியாசங்களை ஒப்பிட்டுப் பார்த்து சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |

**(ஈ) கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 03 ஆண்டுகளாக இருந்தும் ரூபா 31,763 ஆன கிடைக்க வேண்டிய 02 கணக்கு மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருககவில்லை. | அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (ii) | 05 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை இருந்தும் ரூபா 3,969,364 ஆன கேள்வி வைப்புக்கள் தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருககவில்லை. . | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (iii) | 5 ஆண்டுகளுக்கு முன்னிருந்து வரும் ரூபா 527,221 ஆன நீர் வழங்கல் கடன்கொடுத்தோர் மீதியை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருககவில்லை. | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |

**(ஈ) கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 21,192,252 ஆன 09 கணக்கு விடயங்களுக்குரிய சொத்து ஆவணங்கள், விரிவான உப ஆவணங்கள், வருமான அறிக்கைகள் மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப் படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் மெய்மையாய்வு செய்ய முடியவில்லை. | உறுதிப்படுத்தத் தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், நிதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக விதி) | | | |
| (i) | விதி 59 | சபை அதிகாரப் பிரதேசத்தில் வியாபாரங்கள் மற்றும் கைத்தொழில்கள் தொடர்பாக கணிப்பீடொன்று நடாத்தப்பட வேண்டிய போதும் அவ்வாறு செய்யப்பட்டிருக்க வில்லை. | விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் அண்டில் உரிய கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. |
| (ii) | விதி 217 மற்றும் 218 | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பீ.எஸ் 46 மாதிரியின் பதிவேடொன்று பேணப்படாமல் இருந்ததுடன் சகல காணி மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு ஆண்டும் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | திறைசேரி செயலாளரின் 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI2002/02 இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனி உபகரணங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான புறம்பான நிலையான சொத்து பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட. வேண்டும். | கணினி உபகரணங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான பதிவேடு பராமரிக்கப்பட்டு வருகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

------------------

### 2.1 நிதி விளைவுகள்

-----------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,659,539 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,687,482 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

--------------------------

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 850,000 | 832,985 | 832,985 | - | 510,000 | 570,400 | 570,400 | - |
| \(ii) | வாடகை | 7,715,924 | 8,926,673 | 9,024,562 | 226,136 | 5,423,907 | 3,997,458 | 3,673,433 | 324,025 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,290,000 | 473,020 | 473,020 | - | 535,000 | 1,161,543 | 1,161,543 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 18,010,943 | 14,148,149 | 15,580,953 | 1,275,609 | 2,460,000 | 16,166,578 | 13,458,165 | 2,708,413 |
| | மொத்தம் | 28,866,867 | 24,380,827 | 25,911,520 | 1,501,745 | 8,928,907 | 21,895,979 | 18,863,541 | 3,032,438 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

……………………..

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134(i) பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்கள் இனங்காணப்பட்டு வீதவரி அறவிடுவதற்கு | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்கள் இனங்காணப்பட்டு வரைபடமாக்கப்பட்டு எதிர்வரும் எடுத்து வருகிறேன். |

நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 ஏனைய வருமானங்கள்

--------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபைக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றம் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் போதுமுறையான அங்கீகாரமொன்று இல்லாமல் வழங்கப்பட்டிருந்ததுடன் வேலை செய்த மணித்தியாலங்கள் அல்லது ஓட்டக் கிலோமீற்றர் அளவின் அடிப்படையில் அறவிடப்படவில்லை | இயந்திர மணி அல்லது கி.மீ பிரகாரம் வாடகை அறவிடப்பட வேண்டும். | சபை தீர்மானத்தின் அடிபப்டையிலும் பொது வேண்டுகோளின் பிரகாரம் சேவை வழங்கும் நோக்கில் இயந்திர மணி அல்லது கி.மீ பிரகாரம் அறவிடப்படவில்லை. யூலை மாதத்தின் பின்னர் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் |

### 2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 வரை கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்ற தண்டப் பணங்கள் ரூபா 918,259 ஆகவும், முத்திரைக் கட்டணங்கள் ரூபா 357,350 ஆகவும் காணப்பட்டன. | ஆண்டின் வருமானம் செயற்திறனாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் இறுதி குறிப்பிடப்பட்டுள்ள மீதிகள் மாத்திரம் இருப்பதாக அறிய தருகின்றேன் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------

### 3.1 செயலாற்றல்

------------------

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை சட்டம் 126 பிரிவின் கீழ் 28 பிரதானமான விடயங்களை நிறைவேற்றுவதற்கான உப பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் பிறப்பிப்பதற்கு பிரதேச சபை சட்டம் பிரயோகிக்கப்பட வேண்டும். | உப விதிகள் தயாரிப்பதற்காக சபை உத்தியோகத்தர்களிடமுள்ள அறிவு போதியளவில் இல்லாமையால் நடவடிக்கை எடுத்தல் தாமதமாகியிருந்தது. |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிப்பதற்கு தாமதமடைந்திருந்தது. 2019 ஆம் ஆண்டில் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 பிரகாரம் அடைய வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகள் குறித்து அறிந்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு குறித்த செயற்பாடு மற்றும் இலக்குகுள் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டும். | நியதிகள் 2020 பாதீடு தயாரிப்பதற்காக அடிப்படையாக கொண்டுள்ளதாக அறிய தருகின்றேன் |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 231,751,690 பெறுமதியான 41 நாட்குறிப்புக்கள் எந்தவொரு | நாட்குறிப்புக்களுக்காக நாட்குறிப்ப உறுதிச்சீட்டுக்கள் உறுதிப்படுத்தப்பட் | ஏற்றுக்கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகாரமொன்று இல்லாமலல் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் கணக்கு வைக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தர்கள் முறையாக மேற்பார்வையொன்ற செய்யப்பட்டிருக்கவில்லை. | டு அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், வேண்டும். | |
| (ஆ) | 2014 ஆம் ஆண்டின் போது அப்போதய தலைவர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 97,429 பெறுமதியான 88 கல்வனைஸ் குழாய்களை மீள் சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாய்மொழி மூலமாகவும் எழுத்து மூலமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மீள ஒப்படைக்காவிட்டால் சந்தைப் பெறுமதி அடிப்படையில் அறவிடப்படும். |

## 3.3. மனித வள முகாமைத்துவம்

--------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு<br>--------------------------- | பரிந்துரை<br>------------------------ | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை<br>-------------------------- |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை சபையின் ஊழியர்களிடையே 18 பதவிகளில் வெற்றிடங்களும், 01 மிகை பதவி மேலதிகமாகவும் காணப்பட்டன. | ஊழியர் வெற்றிடங்களை நிரப்பி செயற்பாட்டு வினைத்திறனை அதிகரித்துக் கொள்ள வேண்டும். | வெற்றிடங்கள் தொடர்பாக உள்ளூராட்சிமன்ற ஆணையாளர் தெரியப் படுத்தப்பட்டுள்ளார். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை வருடக் கணக்காக இருந்து வரும் வேலையை விட்டுச்சென்ற உததியோகத்தரொருவரிட மிருந்தும் ஓய்வுபெற்ற முன்று உத்தியோகத்தர் களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா 81,161 ஆன கடன் மீதியொன்று காணப்பட்டது. | ஊழியர் கடன் காலரீதியாக அறவிடப்பட வேண்டும் | வேலையை விட்டுச்சென்ற உததியோகத்தரின் கடன் பிணையாளியிடம் அறவிடுவதற்கு அறறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் கடன்தொடர்பான தகவல்கள் ஓய்வூதிய பணிப்பாளரிடம் விசாரித்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்களை பதிவேடுகளுக்கு உட்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்கு சொந்தமான பேருந்து நிறுத்துமிடத்தில் கடைகள், கெபித்திகொள்ளாவ நூலக கட்டிடம், வாகல்கட வாரச்சந்தை கடைகளுடன் மலசலகூடம் மற்றம் வாகல்கட நூலக கட்டிடத்தின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

**3.4.2 கையேற்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை சபையினால் சபையினால் பன்படுத்தப்படும் ரூபா 6,209,763 பெறுமதியான 07 வாகனங்கள் சபைக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளுராட்சி திணைக்களத்தினால் எடுக்க வேண்டிய எதிர்வரும் நடவடிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

**3.4.3 செயலற்ற / பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2016 ஆம் ஆண்டில் சபைக்குக் கிடைக்கப் பெற்ற ரூபா 2,175,000 பெறுமதியான போர்டோன் வகை ட்ரக்டர் வண்டியானது 2016 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை எவ்விதப் பயன்பாட்டுக்கும் உட்படுத்தப்படாது சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | விளைவற்ற சொத்தக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது அத்தியவசிய சேவைகளுக்காக போதியளவு டிராக்டர்கள் காணப்படுவதால் இந்த டிராக்டரை சேவையில் ஈடுபடுத்த போதியளவு சாரதிகள் இல்லாமையால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ரூபா 1,227,950 ஆன 03 வாகனங்கள் செயலிழந்த நிலையில் காணப்படுவதோடு இந்த வாகனங்களைப் பழுதுபார்த்து பாவனைக்குட்படுத்த அல்லது 2015 யூலை 10 ஆந் திகதிய 02'2015 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் கைதவிர்ப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயலிழந்த நிலையில் காணப்படும் வாகனங்களை பழுது பார்த்து பயன்பாட்டிற்கு எடுக்கவோ அல்லது அகற்றவோ நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | மோட்டார் சைக்கிளை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய இரண்டு வாகனங்களின் உரித்தினை கையேற்ற கைதவிர்ப்பதற்க நடவடிக்கை எடுக்கப்படும. |
| (இ) | வருடக் கணகக்காக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் சபை வளவில் வைக்கப்பட்டிருந்த ரூபா 500,000 பெறுமதியான மின்பிறப்பாக்கியொன்று திருத்தி பயன்படுத்தவோ அல்லது பாதுகாப்பாக வைக்கவோ சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மின்பிறப்பாக்கியை திருத்தி பாதுகாப்பாக வைக்கவோ சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை |

**3.6 பெறுகைகள்**

---

**பெறுகைத் திட்டம்**

---

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுவனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுவனவுத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும் | பெறுகை திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

**04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் செயற்படுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஜனவரி 28 ஆம் திகதிய DMA/2009(1)(i) இலக்க நிதி அமைச்சு மற்றும் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | இவ்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் . |